**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**EA.No.13/2024 in EP.No.1/2017 in OS.No.4/2015- PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாஸ்கரன் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.முனிரத்தினம் | Occupation | -- |
| Village /Area | அம்மூர் | Age | 59 |
| Taluk | வாலாஜா | Aadhar Card No. | 4355 1060 0893 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **10.06.2026**

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் அம்மூரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்று எனக்கு தெரியாது. வாதி நக்கீரன் எனக்கு மாமா மகன் ஆவார். மனுதாரரும் என்னுடைய தாய்மாமன் மகன் ஆவார். என் தகப்பனார் முனிரத்தினம் இறப்பதற்கு முன்பு என் வீட்டில் தான் வசித்து வந்தார். விஜயராஜ் என்பவரின் தந்தை உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் அப்பா சொல்லி தெரியும். எந்தெந்த சொத்து குறித்து உயில் எழுதப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணத்தை நான் இதுநாள் வரை நேரில் பார்க்கவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் அந்த உயில் ஆவணத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லியிருப்பது தவறு தானே என்றால் நான் அந்த உயில் ஆவணத்தை பார்த்ததில்லை. என் தந்தை உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டதாக கூறியதை வைத்து இன்று நான் சாட்சியம் அளிக்கிறேன். அசல் உயில் ஆவணம் இருந்தால் அதில் என் தந்தையின் சாட்சி கையெழுத்து உள்ளதா என்பதை என்னால் பார்த்து சொல்ல முடியும். என் தந்தை சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் அசல் உயில் ஆவணம் இந்த மனுவில் தாக்கல் செய்யப்படாததால் என் தந்தையின் கையெழுத்து குறித்து என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றாலும், இந்த

வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாமல் மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.06.10 17:55:18 -0400

I Additional District Judge,
Ranipet.